**கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் - 2014**

கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நியம இலக்கம் 01**

(i) பணிக்கொடை ஒதுக்கீடு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 51,000,000 தொகையான மூலதன நன்கொடை, மானியமொன்றாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், இம்மானியங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய காலக்கழிவு இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(அ) நியம இலக்கம் 02**

நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,617,212 தொகை மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பன முதிர்ச்சியடைந்தமையால் கிடைத்த ரூபா 31,910,516 தொகை என்பன முதலீட்டுச் செயற்பாடுகளாக இனங்காணப்படாமல் காசு, காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் கீழ் உருப்படிகளாக காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணிப்பீட்டு வழுக்கள் காரணமாக ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய திறைசேரி உண்டியல் மீதான வட்டி ரூபா 1,232,585 ஆல் கூடுதலாகவும் நிலையான வைப்புக்களின் மீதான கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 588,883 ஆல் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 20,940,000 தொகையான மீள் கணிப்பீட்டு ஒதுக்கம் மீளாய்வாண்டின் போது வேறாக இனங்காணப்படாமல் திரண்ட ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 1646 | வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 757 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீனிக் கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,385,333 ஆன தொகையொன்று 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட

வேண்டியதாக இருந்த போதும், அது கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வில் காட்டப்பட்டிருக்கவில்லை. அக்கடன்பட்டோர் தவிர எஞ்சிய கடன்பட்டோரிடமிருந்து ரூபா 2,076,140 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 381,247 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும் அறவிடப்படாமல் காணப்பட்டது. இக்கடன்தொகையை மீள அறவிடுவதற்காக போதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன்கொடுத்தோரிடமிருந்து ரூபா 7,895 தொகையான மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 1,092,469 தொகை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகவும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,780,836 மிகையாக இருந்ததுடன், அதற்கெதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 28,875,134 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 35,655,970 தொகையான அதிகரிப்பிற்கு செயற்பாட்டுச் செலவினம் ரூபா 34,456,208 இனால் அதிகரிப்பிற்கு ஒப்பாக திறைசேரி மானியங்கள் ரூபா 112,800,000 தொகையான பெறுவனவுகள் மற்றும் செயற்திட்டங்களுக்காக வரிசை அமைச்சிடமிருந்து ரூபா 10,000,000 ஆன பெறுவனவுகள் என்பன பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

வழங்கல் மற்றும் நுகர்வுப்பொருட்களின் செலவினம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் என்பன முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே 29 சதவீதம் மற்றும் 188 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 3.3 நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

நிறுவகத்தின் ஊழியர் ஒருவரால் அவரை வேலையிலிருந்து நீக்கியமைக்கு எதிராகவும் ஓய்வுபெற்றிருந்த இன்னுமொரு ஊழியரால் ஓய்வுபெறச் செய்யப்பட்டமைக்கு எதிராக நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 06 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 38,800,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் ரூபா 35,400,000 தொகையான இரண்டு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் வருடாந்தம் ஆகக்குறைந்தது இரண்டு புதிய கரும்பு இனங்களை அறிமுகப்படுத்துவதற்காக இரண்டு ஆராய்ச்சி செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2013 மற்றும் மீளாய்வாண்டின் போது எந்தவொரு கரும்பு இனத்தினையும் அறிமுகப்படுத்துவதற்கு தவறியிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முறையே ரூபா 25.69 மில்லியன் தொகையும் ரூபா 35.6 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது கரும்பு இனங்கள் அறிமுகப்படுத்தல் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் வேறாக இனங்காணப்படக்கூடிய வகையில் கணக்கு வைப்பு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 24.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இயந்திர தொழில்நுட்ப பிரிவினால் MT/01/14 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பசளையிடும் அப்ளிகேடர் நிர்மாணத்தல் மற்றும் MT/03/14 ஆம் இலக்கத்தின் கீழான உள்நாட்டு கரும்பு அறுவடை செய்வதற்காக அறுவடை செய்யும் சிறிய இயந்திரமொன்றையும் அறிமுகப்படுத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முறையே ரூபா 1.43 மில்லியனும் ரூபா 0.38 மில்லியனும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரியதாக எதுவித செயற்பாடொன்றும் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு சீனி உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு கிலோகிராம் சீனி அலகுக்கும் 10 சதம் வீதம் செஸ் வரி அறவிடப்பட வேண்டுமென வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் சீனி உற்பத்தி செய்யும் மூன்று உள்நாட்டு நிறுவனங்களின் உற்பத்தி அளவு தொடர்பாக சில மாதங்களுக்காக கிடைக்கப்பெற்றிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வின் போது செய்யப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரித்தாக ரூபா 3,678,955 செஸ் வரியாக கிடைப்பதற்கு இருந்ததுடன், அந்நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்டிருந்த சீனி தொடர்பான முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொண்டு செஸ்வரி தொகையை கணக்கிடுவதற்கு ஆராய்ச்சி நிறுவகம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்காக இறக்குமதியாளர்களிடமிருந்து ஒவ்வொரு கிலோவிற்கும் சதம் 25 செஸ் வரியாக அறவிடப்பட வேண்டிய போதிலும், 08 நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட 2,513,520 தொகைக்காக பெறவேண்டிய ரூபா 628,380 தொகை செஸ்வரியாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------

அரச கம்பனியொன்றுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு நிறுவகத்திற்குச் சொந்தமான 4 வாகனங்கள் 2014 நவம்பர் 20 ஆம் திகதி ரூபா 3,050,000 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா ஒரு மில்லியன் பணத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வாகனங்களின் உரித்தைக் கையளிப்பதற்கும் எஞ்சிய ரூபா 2,050,000 தொகையை ஆண்டினுள் அறவிடுவதற்கும் இணங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உடன்படிக்கைக்கு முரணாக ரூபா 100,000 தொகை 2014 நவம்பர் 14 ஆம் திகதி பெற்றுக்கொண்டதன் பின்னர் அனைத்து வாகனங்களும் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், மீண்டும் 03 வாகனங்கள் மாத்திரம் 2015 மே 29 ஆம் திகதி மீளப் பெறப்பட்டிருந்தன.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

---------------------------------------------------

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 193 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கை 173 ஆக இருந்தது. செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை

பதவிகள் முறையே 07, 01, 09 மற்றும் ஆரம்ப மட்டத்தில் 03 வெற்றிடங்களும் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) செஸ் வருமான சேகரிப்பு

(இ) வாகனப் பயன்பாடு